2015 மார்ச் 27]

வகையில்தான் ஸ்ரீரங்கம் தொகுதியில், முண்டிப்பட்டி பகுதியில் 1,500 கோடி ரூபாய் செலவில் Double coated board என்று சொல்லக்கூடிய ஈரடுக்குகள் கொண்ட காகித அட்டை தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அடிக்கல் நாட்டியபோதே, 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் இந்த ஆலை இயக்கப்படும் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதுபோல், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் 2015 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்திற்குள் அந்த ஆலை திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

69—

சிற்றுந்து வசதி

***48057—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, துடியலூர் முதல் மருதமலை வரை சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் தடம் எண் 123-ஏ பேருந்து மருதமலை SITRA வழி துடியலூர்மூலம் தினசரி 14 நடைகளும், தடம் எண் 123-பி பேருந்து மருதமலை SITRA வழி துடியலூர்மூலம் தினசரி 4 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

அதேபோல், துடியலூர்-மருதமலை வழித்தடத்தில் இரண்டு தனியார் சிற்றுந்துகளும் துடியலூர்-வடவள்ளி வழித்தடத்தில் இரண்டு தனியார் சிற்றுந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. வடவள்ளி-மருதமலை வழித்தடத்தில் பயணிகளுடைய அடர்வு 47% மட்டுமே உள்ளது. எனவே, கவுண்டம்பாளையம் தொகுதி, துடியலூர் முதல் மருதமலை வரை அரசு சிற்றுந்துகள் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

திரு. வி.சி. ஆறுக்குட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் மக்கள் தலைவி, மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். என்னுடைய கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட துடியலூர் பகுதியிலிருந்து மருதமலைக்கு பேருந்து இயக்க வேண்டுமென்று என்னுடைய கேள்வியில் கேட்டிருந்தேன். தனியார் சிற்றுந்து இயக்கப்படுகிறது. ஆனால், அது சரியான நேரத்தில், சரியான வழித்தடத்தில் இயங்குவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால், பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றார்கள். ஆகவே, சரியான வழித்தடத்தில், தனியார் சிற்றுந்து இயக்கப்படவில்லை என்ற காரணத்தினால், அரசு சிற்றுந்து சேவையை அங்கு வழங்கினால், பொது மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால், அதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய துடியலூர் முதல் மருதமலை வரை ஏற்கெனவே அரசுப் பேருந்துகள்மூலம் 18 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன, அந்த 18 நடைகளில் பயணிகளின் அடர்வு 47% மட்டுமே உள்ளது; 50%-க்கும் குறைவாகத்தான் இருக்கின்றது. பயணிகள் போதிய பேருந்து வசதிகளைப் பெற்று வருகின்றார்கள். தனியார்

நிறுவனங்களின் மூலம் இயக்கப்பட்டு வருகின்ற அந்த சிற்றுந்து களையெல்லாம் 2014-2015 ஆம் ஆண்டு, பிப்ரவரி வரை 18,360 முறைகள் சோதனை செய்து, 1,407 சிற்றுந்துகள் மீது சோதனை அறிக்கை வழங்கப்பட்டு, அதில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் 116 சிற்றுந்துகள்மீது துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடத்தில் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்றபொழுது, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, உத்தரவின்படி, கூடுதலாகப் பேருந்துகளை இயக்குவதற்குத் துறை சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

பாலம் கட்டுதல்

***5835—திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், அய்யலூர் பேரூராட்சி, கோடங்கி சின்னாள்பட்டி சாலையில் வரட்டாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழே*